SYU வெளியீடு

ஒக்டோபர் 2021
அணி –02 படை – 05
ISSN - 2279 - 137X

# செந்தாரகை



செந்தாரகை
சோஷலிச இளைஞர் சங்கம்

ஒக்டோபர் 2021
அணி –02 படை – 05

இல.464/20,
பன்னிப்பிட்டிய வீதி,
பெலவத்த, பத்தரமுள்ள.

Tel:
011 2171 021
077 0880 580
076 6626 754

e-mail
syulanka@gmail.com

web
www.syulanka.com

facebook
syulanka

## இளைஞர்களைப் பிரிக்காதே...

எம்மைப் பிரித்து வைக்க எத்தனை தந்திரோபாயங்கள்? சாதி, மதம், இனம், பிரதேசம், நிறம் என்று எத்தனை தடுப்புச் சுவர்கள்? திட்டமிட்டு இந்தக் கொடூரச் சிறைக்குள் இளைஞர்கள் அடைக்கப்பட்டுவிட்டனர். இது காலங்காலமாக கடைப்பிடித்துவரும் மரபாக மாறிவிட்டது.

இந்தக் கொடூரச் சிறைக்குள் காதலுக்கு கட்டுப்பாடு! ஒரு கோப்பை உணவை மகிழ்வுடன் பலரும் பகிர்ந்துண்ணத் தடை! இரக்கம் காட்ட, சிரித்துப் பேசத் தடை! மனித நேயத்திற்குத் தடை! ஒன்றுபட்டு வெற்றிக்கனியை எட்டிப் பறிக்கவும் தடை! திரும்பும் கோணத்திலெல்லாம் புதுப்புது வடிவத்தில் பிறப்பிக்கப்படும் தடைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் மாத்திரம் இங்கு பஞ்சமேல்லை.

ஆனால், இளைஞர்களைப் பிரித்தாளும் ஆட்சியாளர்கள் மாத்திரம் எப்படி இத்தனை ஒற்றுமையாக இருக்கிறார்கள்? திருமண உறவுகள், இராப்போசன விருந்து, கள்ள வியாபாரங்கள், குற்றவாளிகளுக்கு வேண்டிய நேரத்தில் விடுதலை, வேண்டியது போல் சட்டமியற்றல், சட்டமூலத்திற்கு ஒரு சேர கைகளை உயர்த்துதல், அவர் ஆட்சிக்கு வந்தால் இவரைப் பாதுகாத்தல், இவர் ஆட்சிக்கு வந்தால் அவரைப் பாதுகாத்தல். எவ்வளவு ஒற்றுமையுடன் அவர்கள் இருக்கிறார்கள்?

ஆனால், அவர்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் இருந்துகொண்டு எம் போன்ற சாதாரண மக்களை ஏன் பிரிக்கிறார்கள்?

ஏனென்றால், சாதாரண மக்கள் ஒன்று சேர்ந்துவிட்டால், அவர்களால் திருட முடியாது. வெளிநாடுகளில் சொத்து சேர்க்க முடியாது. நாட்டு வளங்களை ஏகாதிபத்தியத்துக்கும் வல்லாதிக்கத்துக்கும் தாரைவார்க்க முடியாது. காணாமல் போகின்ற பூனைக்குட்டியைத் தேட தனிப்படை அமைக்க முடியாது. வித்தியா, ஹிஷாலினிகளிடம் இருந்து குற்றவாளிகள் தப்பிக்க முடியாது. தமது அரசியல் இலாபத்திற்காக மீண்டும் மீண்டும் கலவரங்களையும் யுத்தங்களையும் தோற்றுவிக்க முடியாது. நாம் ஒன்று சேர்ந்து விட்டால் ஆளும் கூட்டம் அழிந்துவிடும் என்று அவர்களுக்கு நன்குத் தெரியும்.

அதனால், எம்மைப் பிரித்து இளைஞர்களின் இரத்தத்தைச் சூடேற்றி அவர்கள் குளிர்க்காய்கிறார்கள். ஆனால், நாமோ எதிர்காலத்தைத் தொலைத்து அழிந்துப் போகிறோம். காணாமலாக்கப்படுகிறோம். வஞ்சிக்கப்படுகிறோம். அந்நியப்பட்டுப் போகிறோம். ஆக, எல்லா இளைஞர்களும் ஒன்று சேர்ந்து நமக்கானதொரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திப் பார்ப்போம். அந்த மாற்றம் காலங்காலத்திற்கும் தாங்கும்.

# Politics



## "யூத்" நாம் செய்ய வேண்டியதென்ன?

கடந்த ஜனாதிபதித் தேர்தலானது சற்று விசித்திரமான தேர்தலாகும். அங்கு கோட்டாபய அலை என்பதனை விட, கோட்டாபய சுனாமியே அடித்தது. எந்தெந்த குழுக்களை இலக்கு வைக்க வேண்டுமோ, அந்தந்த குழுக்கள் இலக்கு வைக்கப்பட்டு பக்காவாக ஸ்கிரிப்ட் மேடையேற்றம் செய்யப்பட்டது. ஈஸ்டர் அட்டாக் கோட்டாவின் தேவையை நாட்டிற்கு உணர்த்தியது போன்றதொரு கதை. இதில் ஹீரோ, வில்லன்கள், காமடியன்கள் என்று ஏராளமான கதாபாத்திரங்கள்.

ஈஸ்டர் அட்டாக்கைப் போலவே, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, ஒரே நாடு ஒரே சட்டம், இளைஞர்களுக்கான எதிர்காலம், டேட்டா பேஸ், பிரீ வைபை கொண்ட நாடு போன்று பல்வேறு ஹாட் டொப்பிக்குகள் உலாவந்தவண்ணம் இருந்தன.

எலெக்ஷன் முடிந்த அடுத்த நாளே ரோட் ரோட்டாக பெயிண்டிங். சிலர் மதில் ஸ்பான்சர், சிலர் பெயிண்ட் ஸ்பொன்சர் சிலர் இலவசமாக பெயின்டிங்.

இப்பிடி முழு எதிர்பார்ப்புடனோடு ஆட்சியில் அமர்ந்த கவர்மென்டுக்கு என்ன நடந்தது ?

இன்றைய நிலையில் இலங்கை வரலாற்றிலேயே மிகவும் குறைந்த காலத்தில் மக்களது ஒட்டுமொத்த எதிர்ப்பைச்யும் சம்பாதித்த அரசாங்கம் என்ற பெயர் மாத்திரமே இவர்களுக்கு எஞ்சியது.

அப்படி என்ன தான் நடந்தது ? யார் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் ?

உண்மையான பிரச்சனையை கவர் அப் பண்ணி, போலியான பிரச்சனைகளை வெளிய காட்டி எலெக்ஷன்ல வென்றதே முக்கிய பிரச்சினையாகும். அதாவது இலங்கையை பொறுத்த வரையில் ஏறக்குறைய கடந்த 74 வருடங்களாக இந்த சிஸ்டம் சரிவர இயங்கவில்லை. குறிப்பாக 77 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தை லிபரலைசேஷன் செய்வது முதல்கொண்டு சிக்கல்கள் தலைக்கு மேல் நின்று ஆடத் தொடங்கின.

நாடு கடனில் சிக்கித் தவிக்கத் தொடங்கியது. வேலைவாய்ப்புத் தேடி நாட்டை விட்டு டெய்லி ஆயிரக்கணக்கான இளைஞர்கள் போக ஆயத்தம் செய்தனர். இன்னொரு பக்கம் கொரூர யுத்தம். விலைவாசி ஏற்றம், எதிர்காலம் இல்லாத நாடாக சிக்கித் தவிக்கத் தொடங்கியது.

இது எல்லாத்துக்கும் காரணம் நாட்டின் சிஸ்டம். இந்த சிஸ்டத்தை மாத்தாம ஒன்னும் பண்ண முடியாது. அது வரைக்கும் ஒவ்வொரு எலெக்ஷனுக்கும் ஒவ்வொரு ஸ்டோரி லைன் மாத்திரமே மிச்சம்.

இன்றைய நிலமையில் பாஸ்போட் ஆபிசுக்கு முன்னாலயும் பின்னாலையும் பெரிய லைன் நிக்குதென்டா அதுக்கு காரணம் யார் ? நிக்கிற ஆட்கள்ள மேஜோரிட்டி யூத். அதுவும் இந்த கவர்மெண்ட்ட கொண்டு வந்த யூத்.

ஆப்கானிதான்ல இருந்து ஆயிரக்கணக்கானவங்க பிலேன்ல தப்பிச்சு போக ட்ரை பண்ணினது போல, இங்கயும் யார் சரி பிலேன் கொண்டுவந்து நிப்பாட்டி, வாங்க வீசா, டிக்கட் இல்லாம போகலாம் எண்டு சொன்னா, எந்த நாடு என்று கூட கேக்காம மக்கள். அவதிப்பட்டு போவாங்க. இப்படித்தான் வரவேணாம் வரவேணாம் என்டு ஆஸ்திரேலியா அரசாங்கம் சொன்னாலும், நாளுக்கு நாள் சனம் அடிப்பட்டுக்கொண்டு போகத்தான் ட்ரை பண்ணுது.

இதற்கு முடிவு தான் என்ன ?

ஒவ்வொரு எலக்ஷனிலும் மக்களை, குறிப்பாக இளைஞரை ஆசை காட்டி மோசம் செய்யும் இந்த தட்டு மாற்று அரசியல் நிச்சயம் தோற்கடிக்கப்பட வேண்டியதொன்று. ஆனால் அது இன்னமும் ஒரு முதலாளித்துவக் கட்சியாக இருக்க முடியாது. மாறாக இளைஞர், சுற்றுச் சூழல், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, பொருளாதாரம், தேசப்பற்று உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்களை முன்நிறுத்திய முற்போக்குச் சக்தியாகவே அமைய வேண்டும். அதன் தலைமையை, இன்றைய இலங்கையில், மக்கள் விடுதலை முன்னணியினைத் தவிர வேறெந்த அமைப்பாலும் வளங்கள் கூடிய தகைமை இல்லை என்பதே ரியாலிட்டி.

வாருங்கள், ஒன்றாய் நாம் அணி திரள்வோம்...

# அப்பாவி விவசாயிகளின் காணிகளை

# தாரைவார்ப்பதை உடனடியாக நிறுத்து!

**தனியார் நிறுவனமொன்றுக்கு கற்றாழை செய்கைக்காக என்று அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து ஒரு இலட்சத்து இரண்டாயிரம் (102,000) ஏக்கர் காணியை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 'அவுரா லங்கா' எனப்படும் நிறுவனமொன்றினால் அனுராதபுரம் ராஜாங்கனை யாய 18 பகுதியில் சேதனக் கற்றாழை செய்கைக்கு என தெரிவித்து விவசாயிகளின் 66 ஏக்கர் காணியை இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் நகைப்புக்குரிய விடயம் என்னவென்றால், கடந்த மூன்று வருடங்களாக மேற்கொள்ளப்படுகின்ற இச்செயற்றிட்டத்தில் ஒரேயொரு கற்றாழைக் கன்றை கூட இக் காணியில் பயிர் செய்யவில்லை என்பதாகும்.**

இதுவரை காலமும் இவ்வியாபாரி செய்துள்ளவை வில்பத்து வன ஒதுக்கின் தூண்டல் பகுதியை டோசர் செய்ததும், கிராமத்துக்குச் சொந்தமான குளத்தை வியாபாரியின் தன்னிச்சைக்கு குட்டையாக மாற்றியதும், கிராமத்தின் நுழைவு வீதியின் இரண்டு பக்கமும் ஐந்து அடிகளை விட ஆழமான வடிகான்களை வெட்டி பாதையின் இருமருங்கிலும் வளர்ந்திருந்த மரங்கள் அனைத்தும் டோசர் செய்து அழித்ததும், அப்பகுதியில் இருந்த கல் குன்றுகளை பெயர்த்ததும், காலங்காலமாக ஒற்றுமையுடன் வாழ்ந்த யாயை 18 கிராம மக்களுக்குள் பிரிவினையைத் தோற்றுவித்து மோதல் ஏற்படுவதற்கான பின்னணியை உருவாக்கியதும் ஆகும். இந்த அநியாயங்களை எதிர்க்கும் கிராமவாசிகளுக்கு எதிராக அடக்குமுறைக் கட்டிவிழ்த்து விட்டதுமே ஆகும்.

இவ்வாறான சர்ச்சைக்குரிய 'அவுரா லங்கா' நிறுவனத்துக்கு கபினட் அமைச்சரவையினால் 30 வருட கால குத்தகைக்கு 102,000 ஏக்கர் காணியை அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து வழங்குவதற்கு அனுமதித்திருப்பதில் இந்த அரசாங்கத்தின் தேசப்பற்றும் சூழல் நேயமும் தெளிவாகப் புலப்படுகின்றது.

மேலும் இக்கற்றாழை செயல்திட்டத்தின் ஆரம்பக் கட்டமாக, ராஜாங்கனை மற்றும் நொச்சியாகம பகுதிகளில் இருந்து சுமார் 2000 ஏக்கர் நிலத்தை கற்றாழை செய்கைக்கான நாற்று மேடைகளைத் தயாரிப்பதற்கு என தெரிவித்து, விவசாயிகளின் சேனைப்பயிர்செய்கைக் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வரைவுகளை பிரதேச செயலகம் உட்பட ஏனைய அரச நிறுவன மட்டங்களில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதில் அரசியல் அதிகாரத்தினால் விவசாயிகளுக்கு சேனைப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான அனுமதிப் பத்திரங்களை வழங்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குக் கூறியிருக்கின்றது. காட்டிலிருந்து ஒரு கம்புத்தடியை வெட்டினால் கூட குற்றவாளியாகக் கருதும் சட்டமானது சேனைப் பயிர்செய்கை செய்யும் காணிகளில் கற்றாழை செய்கைக்கு அனுமதி வழங்குவது எந்தச் சட்டத்தின் கீழ் என வினவ வேண்டியுள்ளது.

இவ்வாறு விவசாயியை தமது காணியில் இருந்து தந்திரமாக தூரமாக்குவதை அரசாங்கம் செய்துகொண்டிருக்கின்றது. இரசாயனப் பசளையை தடைசெய்வதின் ஊடாக சேனைப் பயிர்ச்செய்கை விவசாயிகளின் சோளம் மற்றும் ஏனைய மரக்கறி பயிர்செய்கைகள் அனைத்தையும் பலவீனப்படுத்திய அரசாங்கம் கற்றாழை செய்கைக்கு தேவைப்படுவதினால் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகளை செய்துகொடுப்பது பாரிய காணிக் கொள்ளைக்கும் பாரதூரமான சூழல் அழிவுக்கும் வழிவகுக்கிறது.

அதேபோல அனுராதபுரம் மாவட்டத்தில் யானை மனித மோதல் உக்கிரமம் அடைந்திருப்பதும் கூட யானைகளுக்குத் தேவையான வனம் போதுமானதாக இல்லாமையினால் ஆகும். யானை மனித மோதலுக்கு நிரந்தரத் தீர்வொன்றைப்பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்ற நிலையில் இலட்சக் கணக்கான ஏக்கர் காட்டை கற்றாழை செய்கைக்கு என வெட்டிவிட்டால் யானைகள் தமக்குத் தேவையானஉணவைஅரசியல்வாதிகளின் வீடுகளிலா தேடிக்கொள்ளும் என கேட்கவேண்டியுள்ளது.

குளங்களை அழித்து, வன ஒதுக்குகளுக்குரிய தூண்டல் வலயத்தை நாசமாக்கி, ஏனைய உணர்வு வலயங்களை இல்லாமலாக்கி, விவசாயிகளை விவசாய நிலத்திலிருந்து தூரமாக்கி, வன விலங்குகளின் வாழிடங்களையும் உணவையும் இல்லாமலாக்கி மேற்கொள்ளப்படும் கற்றாழை செய்கையினால் கிடைக்கும் பொருளாதார இலாபம் யாருடைய சட்டப் பைக்குள் போகும் என்றும் வினவ வேண்டும் அல்லவா?

வெளிநாட்டுப் பிரஜைகள் அதிகாரத்தில் இருக்கின்ற நமது நாட்டில் இவ்வாறான அழிவுகளை செய்வதற்கு அனுமதி வழங்குவது குறித்து வியப்படையத் தேவையில்லை. ஆனால் நாட்டின் மீது பாசம்கொண்ட சூழல் மீது நேயமுள்ள சோஷலிச இளைஞர் சங்கம் உள்ளிட்ட பல அமைப்புக்கள் இந்த அழிவுக்கு எதிரான கூட்டணியை அமைத்துள்ளது. இதேபோன்று இன்று வடக்கு, கிழக்கு, மலையகம் என எப்பகுதியை எடுத்தாலும் இயற்கை சூழலை அழிக்கும் பல்வேறு நடவடிக்கைகள் நடந்தேறிய வண்ணமே உள்ளன. ஒரு நாட்டின் எதிர்காலம் இளைஞர்களே, எனவே இவ்வாறான அழிவுகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமானால் இளைஞர்கள் அனைவரும் ஓரணியில் திரளவேண்டியது கட்டாயமாகும்.









> யானை மனித மோதலுக்கு நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்ற நிலையில் இலட்சக் கணக்கான ஏக்கர் காட்டை கற்றாழை செய்கைக்கு என வெட்டிவிட்டால் யானைகள் தமக்குத் தேவையான உணவை அரசியல்வாதிகளின் வீடுகளிலா தேடிக்கொள்ளும் என கேட்கவேண்டியுள்ளது.








# வெல்க ஆசிரியர்கள் போராட்டம்

## எமக்கு நல்ல ரிசல்ட் வேண்டும்

தற்போதைய கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியில் இலங்கையின் இளைய சமுதாயம் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இதற்கான காரணம் சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கையை எழுபத்தி மூன்று வருடங்களாக தொடர்ச்சியாக மாறி மாறி ஆட்சி செய்து வருகின்ற இந்த முதலாளித்துவ அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக அனைத்து மக்களும் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை மறுத்துக் கொண்டு வருகின்றமையேயாகும். கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டிய 6% நிதி இன்னும் ஒதுக்கப்படாமல் மிகவும் சொற்ப தொகையே ஒதுக்கப்படுகின்றது. கல்வி இராணுவ மயமாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு மிக முக்கியமாக பாடசாலைக் கல்வித்துறையின் பிரதானமான இரண்டு தொழில்வாண்மைப் பிரிவுகளான ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் தீர்க்கப்படாமல் நிலவுகின்ற சம்பள முரண்பாட்டுச் சிக்கல் காரணமாக பாடசாலைக் கல்வித்துறை மேலும் நெருக்கடி மிக்க நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது.

24 வருடங்களாக தீர்க்கப்படாதுள்ள ஆசிரியர் - அதிபர்களின் சம்பள முரண்பாட்டுச் சிக்கலைத் தீர்த்துவைக்குமாறு வற்புறுத்தி ஆசிரியர்களாலும் அதிபர்களாலும் தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்றளவில் 03 மாதங்கள் கழிந்துள்ளன. எவ்வாறாயினும் இதற்காக அவர்களால் ஏற்றுக்கொள்ளக்கடிய தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதில் இற்றைவரை அரசாங்கம் வெற்றிபெறவில்லை. அதனால் இந்த தொழிற்சங்க நடவடிக்கை நீடித்து வருவதோடு 40 இலட்சத்திற்கு மேற்பட்ட பாடசாலைப் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை அது நேரடியாகவே பாதித்து வருகின்றது.

1995 ஆம் ஆண்டில் இலங்கை ஆசிரியர் சேவையும் 1997 ஆம் ஆண்டில் இலங்கை அதிபர் சேவையும் நிறுவப்பட்ட பின்னர் அதனோடு சம்பந்தப்பட்டதாக சம்பளப் படிநிலைகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் மூலமாக பாடசாலை வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் அடிப்படை பொறுப்பினை வகிக்கின்ற திறமையான படைப்பாற்றல்மிக்க ஆசிரிய மற்றும் அதிபர் தொழில்வாண்மையாளர்களை இந்தச் சேவையின்பால் ஈர்த்துக்கொள்ளவும் தேக்கிவைக்கவும் எதிர்பார்க்கப்பட்டது. இந்தக் கல்வித் தொழில்வாண்மையாளர்களின் கல்விச் சுதந்திரத்தைப் பாதுகாத்து அவர்களுக்குச் சாதகமான வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாக அமைந்தது. இது ஆசிரிய - அதிபர் தொழில்வாண்மையாளர்களுக்கு மாத்திரமன்றி பொதுவில் நாட்டின் கல்வித்துறையில் புத்தெழுச்சி பற்றிய எதிர்பார்ப்பினை உருவாக்கியது.

பின்னர் 1997 இல் ஒட்டுமொத்த பகிரங்க சேவையினதும் சம்பளத்தை திருத்துவதற்காக பீ.சீ. பெரேரா சம்பள ஆணைக்குழு நியமிக்கப்பட்டதோடு அதன் விதப்புரையின்பேரில் வெளியிடப்பட்ட 2/97 அரசாங்க நிர்வாக சம்பளச் சுற்றறிக்கையின் 3.10 பிரிவு மூலமாக 'ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சேவைகளுக்கான சம்பளத் திருத்தங்கள் பின்னர் அறிவிக்கப்படும்' என குறிப்பிடப்பட்டிருந்தது. 1997 தொடக்கம் இற்றைவரை கழிந்த 24 வருடங்களுக்குள் அதிகாரத்தில் இருந்த அரசாங்கங்களின்கீழ் 04 அரசாங்க நிர்வாக சம்பளச் சுற்றிக்கைகள் வெளியிடப்பட்டன.


எவ்வாறாயினும் மேற்படி எந்தவொரு சுற்றிக்கையும் ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைகளுக்கான சம்பளத் திருத்தங்கள் யாவையென்பதை வெளிப்படுத்த தவறிவிட்டது. அதற்கிணங்க சம்பள முரண்பாட்டுச் சிக்கலைத் தீர்த்துவைக்க இந்தச் சம்பள ஆணைக்குழுக்களோ அல்லது அதிகாரத்திற்கு வந்த எந்தவோர் அரசாங்கமுமோ நடவடிக்கை எடுக்கவில்லை. அதைப்போலவே கடந்த 24 வருட காலத்தில் ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைகளுடன் தொடர்புடையதாக இரண்டு சேவைகள் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளபோதிலும் அவற்றை இற்றைவரை முறைசார்ந்தவகையில் அமுலாக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கிணங்க ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைகளுக்காக உரித்தாகவேண்டிய தொழில்சார் மதிப்பு கிடைக்காமையால் மேற்படி சேவைகளைத் தாபித்ததன் நோக்கங்கள் ஈடேறவில்லை.

இந்த நிலைமைக்கு எதிராக ஆசிரியர் மற்றும் அதிபர் தொழில்வாண்மையாளர்களால் அரசாங்கங்களுக்கு பலவிதமான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதோடு பல்வேறு சந்தர்ப்பங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் இதற்கிணங்கவே உயர்தர விடைத்தாள் மதிப்பிடுதல் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது. அதைப்போலவே சட்டமுறையான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பெறுபேறாக 2008 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்ற சம்பள முரண்பாட்டுச் சிக்கலைத் தீர்ப்பதற்கான கட்டளையை வழங்கியதோடு சம்பள முரண்பாட்டினைத் தீர்க்கும்வரை இரண்டு வேதன ஏற்றங்களை செலுத்துமாறு கட்டளையிட்டது. அதற்கிணங்க தற்போதய பிரதமர், அப்போதய ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சர் என்றவகையில் திரு. மகிந்த ராஜபக்ஷ 2009 வரவு செலவினைச் சமர்ப்பித்து இந்தச் சம்பள முரண்பாட்டினை நீக்குவதற்காக 3000 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளதாக கூறினார். எவ்வாறாயினும் இறுதியில் இந்தச் சம்பள முரண்பாட்டினை நீக்குவதற்காக எவ்விதமான பணத்தொகையும் ஒதுக்கப்படவில்லை என்பதோடு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் தற்காலிகமாக செலுத்துமாறு கட்டளையிடப்பட்ட 02 வேதன ஏற்றங்களையும் செலுத்த நடவடிக்கை எடுக்காமை காரணமாகவும் அவர்கள் பாரதூரமான ஏமாற்றுதலுக்கு இலக்காக்கப்பட்டார்கள்.




அதைப்போலவே கடந்த காலப்பகுதி பூராவிலும் ஆசிரியர்களும் அதிபர்களும் இந்தச் சம்பள சிக்கல் தொடர்பாக பேச்சுவார்த்தைகள், ஆர்ப்பாட்டங்கள், பாத யாத்திரைகள், பிணி லீவு எடுத்தல் மற்றும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுதல் போன்றவற்றை மேற்கொண்டபோதிலும் எந்தவோர் அரசாங்கமும் இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு வழங்கவில்லையென அவர்கள் குற்றஞ் சுமத்துகிறார்கள். அமைச்சர், பிரதம அமைச்சர் பேச்சுவார்த்தைகள், அமைச்சு உப குழுக்களின் நியமனம், பேச்சுவார்த்தைகள் மற்றும் பல்வேறு உப குழுத் தீர்மானங்களை சமர்ப்பித்து அவர்களை ஏமாற்றவும் தொழில்சார் நடவடிக்கைகளை அடக்கியாளவும் மாத்திரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக அரசாங்கம் அண்மையில் சம்பள முரண்பாட்டு சிக்கலைத் தீர்ப்பதற்குப் பதிலாக தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிடுவதாயின் ரூபா 5,000 செலுத்துவதாக அழுத்தம் கொடுத்தமையும், பல்வேறு கும்பல்களைப் பயன்படுத்தி தொழிற்சங்க நடவடிக்கைகளை அடக்க முயற்சி செய்தமையும் ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் கண்டனத்திற்கு இலக்காகியுள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் சம்பளப் பிரச்சினையை தீர்ப்பதற்கான எவ்விதமான முனைப்பையோ ஆர்வத்தையோ அரசாங்கம் கொண்டிரவில்லை என்பதோடு இந்தப் பிரச்சினைகளை தீர்க்க முடியாத கையாலாகாத நிலையில் இந்த ஆட்சியாளர்கள் உள்ளனர் என்பதே உண்மை. மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு விசேடமாக இளைஞர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு எவ்விதமான தீர்வும் தற்போதைய ஆட்சியாளர்களிடம் இல்லை என்பதோடு முதலாளித்துவம் தனது கையறு நிலையை வெளிப்படுத்தியுள்ளது எனலாம். ஒரு சோஷலிச ஆட்சி முறைமையினூடாக மட்டுமே இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதோடு இளைஞர்களுக்கான எதிர்காலத்தை வழங்குவதும் ஒரு சமூக அமைப்பு மாற்றம் என்பதையே இப்பிரச்சினைகள் வலியுறுத்தி நிற்கின்றன.



# Titan Security Key

## பாதுகாப்பை அதிகரித்துக் கொள்ளுங்கள்

இன்றைய காலப் பகுதியில் மனித வாழ்வு அதிகமாக தொழில் நுட்பத்துடன் தொடர்பு பட்டிருப்பது மிகவும் சிக்கல் நிறைந்த தரவுகள் வாயிலாகும். இதனால் எமது தனிப்பட்ட விவகாரங்களை பாதுகாத்துக் கொள்வதில் அதீத கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கான ஒரு தீர்வாக Google நிறுவனம் "Taitan two -Factor Authorization Security Key" என்ற வசதியை அறிமுகம் செய்துள்ளது. கனிணி மற்றும் தொலைபேசிகளில் விஷேடமான விடயங்களை பாதுகாத்து வைப்பதற்காக பாவிக்கப்படுகின்ற Passwords, Security Key போன்றவற்றுக்குப் பதிலீடாகவே இது சந்தைக்கு அறிமுகம் செய்யப்படுகிறது. இதனை ஒரு Pen னசளைந ஆகவும் NFC மற்றும் Bluetooth ஆகவும் இணைப்புச் செய்ய முடியும்.



# Remarkable Paper Tablet

## டிஜிட்டல் என்ற உணர்வற்ற நிலை

பேனையாலும் காகிதத்தாலும் மேற்கொள்ளப்படுகின்ற சில நடவடிக்கைகள் எவ்வளவுதான் தொழிலுனுட்ப முன்னேற்றம் ஏற்பட்டாலும் அவற்றினூடாக அவற்றை மேற்கொள்கின்ற போது எமக்கு ஒரு வகையான அந்நியத் தன்மை ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை. அதற்கு ஒரு காரணம் பேனை, காகிதம் , அதில் எழுதப்படும் குறிப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட வகையில் எம்மிடம் காணப்படுகின்ற உணர்வுபூர்வமான தொடர்பாகும். அந்த வகையில் இந்த உணர்வை பெற்றுத் தரத்தக்க டிஜிட்டல் சாதனம் ஒன்று சந்தைக்கு அறிமுகமாகியுள்ளது. Remarkable Paper Tablet என்ற சாதனம் இந்த வசதியை கொண்டதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் காணப்படுகின்ற Remarkable என்கின்ற வசதிதான் எமக்கு காகிதத்தில் எழுதுவது போன்ற உணர்வைத் தரக்கூடிய டிஜிடல் சாதனமாக காணப்படுகின்றது. இதன் மூலம் ஒன்றைக் குறித்துக் கொள்ள, எழுதிக் கொள்ள, வாசித்துக் கொள்ள, ஒன்றை மீளாய்வு செய்துகொள்ள இலகுவாக முடியும். இந்தச் சாதனத்தை பயன்படுத்துகின்ற போது எங்களுக்கு ஒரு புத்தகத்தில், காகித்தில் எழுதுகின்ற உணர்வே ஏற்படுகின்றது.




# EnGoPlanet Smart Solar Bench

## ஸ்மார்ட் தரிப்பிடம்

EnGoPlanet Smart Solar Bench என்பது வளர்ந்த நாடுகளில் காணப்படுகின்ற ஸ்மார்ட் நகரத்திட்டமொன்றாகும். சாதாரணமாக நகர்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற ஆசன இருக்கைகளில் எமக்கு அமர்ந்து கொள்ள முடியுமான வசதியை மாத்திரமே நாம் காண்கின்றோம். ஆனால் இந்த Smart Bench இல் உள்ள விஷேட அம்சம் ஒரு தொலைபேசியோ டப்லட்டையோ இலவசமாக பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வசதி காணப்படுவதுடன் இலவசமாக இணைய வசதியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருப்பதாகும். அதே போன்று இரவு முழுதும் LED மின்விளக்குகளின் ஒளி கிடைத்துக் கொண்டிருப்பதுடன் பாதுகாப்பிற்காக CCTV Camera பூட்டப்பட்டிருக்கிறது. அத்துடன் SOS Switch கள் பொருத்தப்பட்டிருப்பதும் இன்னுமோர் விஷேடமாகும்.

# UNIT 1 FARO

## (A Sleek Visibility - First smart Helmet)

## பாதுகாப்பும் சொகுசும்



வீதியில் சைக்கில் ஓட்டும்போது பெரும்பாலும் விபத்துக்களுக்கு உள்ளாவது பார்வை குறைபாட்டினாலும் தெளிவற்ற தொடர்பாடல் காரணமுமாகும். மற்ற ஓட்டுனர்களுக்கு உங்களை நன்றாக தென்படாத படியால் அல்லது நீங்கள் அடுத்த கட்டமாக என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை புரிந்துகொள்ள முடியாமற் செல்வதால் ஆகும். UNIT 1 FARO சர்வதேச தரப்படுத்தலுக்கேற்ப வடிவமைத்துள்ளது. இதன் சிறப்பம்சம் நீங்கள் போகும் திசையை ஒளிக்கீற்றுகளால் மற்ற ஓட்டுநர்களுக்கு தெரியப்படுத்துவதும் (MPS) Micro Instrumentation and Telemetry Systems மற்றும் விபத்துக்களை அறிந்து கொள்ள முடிவதால் இதை பாதுகாப்பும் சொகுசும் பெற்றுகொடுக்கும் ஸ்மார்ட் தலைக்கவசமாகக் குறிப்பிடலாம்.



# Energizer phone

## ஒரு முறை சார்ஜ் பன்னினால் 50 நாட்களுக்கு

venir Telecome Energizer கையடக்கத் தொலைபேசி மாநாட்டில் (MWC) ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியை அறிமுகப்படுத்தியுள்ளதோடு அதன் பற்றரியின் செயற்திறன் 18,000 ஆகும். இது இன்றைய கையடக்க தொலைபேசியை கனவளவைவிட மூன்று மடங்கு அதிகமாகும். இதன் சிறப்பம்சம் ஒரு முறை சார்ஜ் ஏற்றினால் அதன் பற்றரியை 50 நாட்களுக்குப் பயன்படுத்தலாம்.



## 01 முத்துக்கள் தூவப்பட்ட நீலநிற மைதானம்

வானம் முழுவதும் முத்துக்கள் விதைக்கப்பட்டுள்ளதைப் போன்று ஆதியும் அந்தமும் இல்லாத சிறியளவிலான மற்றும் பெரியளவிலான நட்சத்திரங்களைப் பார்த்து நாம் சிறு வயதில் எவ்வளவு பூரிப்படைந்திருப்போம். “தூரத்தில் மின்னும் அந்நட்சத்திரங்கள் என்ன?” என்ற புரியாத புதிர்கள் எமது உள்ளங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுந்திருக்கும். சிறுவயதில் எம்மை வியக்கவைத்த நட்சத்திரங்கள் சிறிய முத்துக்கள் போன்றவைகளல்ல! எமது சூரியனையும்விட பல மடங்கு பெரியவை என எமக்குத் தெரியும். அண்டவெளி என்பது அவ்வாறான பலகோடி கணக்கான சூரியன்களாலும் கோள்கலாலும் அடங்கியுள்ள பரந்த வெட்டவெளியாக உள்ளது.

மிகப்பெரிய சூரியன்களும் அவற்றைச் சூழவுள்ள கோள்களும் மணித்தியாலத்திற்கு பல லட்சக்கணக்கான வேகத்தில் நாம் அறியாததும் நினைத்துக் கூட பார்க்க முடியாததும் ஒரு திசையை நோக்கி பயணித்துக் கொண்டுள்ளன. இந்த எல்லையில்லா பயணத்தின் போது இடைநடுவில் சூரியன்களும் கோள் மண்டலங்களும் புதிதாக உருவாகுவதோடு இன்னும் சில சந்தர்ப்பங்களில் அதற்கு மாறாக மிக வேகமாக அவற்றின் தன்மைகள் மாறி மாறி வந்து கொண்டுள்ளன.

## 02 எமது உலகம்

அண்டவெளி முழுவதும் பரந்து விரிந்து மிக வேகமாக சுற்றும் இராட்சத சூரியன்களுடனும் கிரகங்களுடனும் நாம் உயிர்வாழும் புவியை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அது மிதக்கும் ஒரு தூசுத் துகளைப் போன்றது.

எமது சூரியனைச் சூழவுள்ள கோள்மண்டலத்தின் ஒட்டுமொத்த எடையில் 99% சதவீதம் சூரியனின் எடையாகும். அதாவது ஏனைய கோள்களின் மொத்த எடை 1% சதவீதத்திற்கும் குறைவானதாகும். நாம் வாழும் புவி ஏனைய கோள்களின் அளவுடன் ஒப்பிடும் போது 5ஆம் இடத்திலேயே உள்ளது. எமது கோள் மண்டலத்தின் வியாழனின் விட்டத்தைவிட 11 மடங்கு குறைவானதோடு எடை 1/9 பங்காகும்.

அளவில் குறைந்ததாக இருந்தாலும், எமது கோள் மண்டலத்தில் ஏனைய கோள்களைவிட புவி சிறப்பானதாகும். எம்மைப் போன்ற புத்தியுள்ள உயிரினத்தின் பூர்வீகமான ஒரேயொரு கோள் எமது புவியாகும். பல்வேறு பிராணிகள், மரச்செடிகள், கடல், ஆறு, குளம், ஏரி, அலங்காரமான நீர்வீழ்ச்சிகள் உள்ளிட்ட இதமான காலநிலை உள்ள ஒரேயொரு கோள் இதுவாக இருப்பது இச்சிறப்புக்கு காரணமாகும்.

சூரியனுக்கு ஆயிரத்து ஐந்நூறு மில்லியன் (1500000000) கி.மீ. தொலைவில் ஒரு நீள் வட்டத்தில் மணித்தியாலத்திற்கு ஒரு லட்சத்து ஆறாயிரம் (1026000) கி.மீ. வேகத்தில் தொடர்ச்சியான பயணத்தில் இருக்கும் எமது புவியின் புராதனம் மிக நீண்ட விசித்திரமான விக்கத்தக்க தொன்றாகும்.



## 03 உலக வரலாற்றுக்கு முன்னுரை

நாம் உலக வரலாறு என்று குறிப்பிடுவது, இந்நீண்ட புராதனத்தின் கடந்த சுமார் 6000 வருட காலகட்டத்தையே ஆகும். அதற்கு அப்பாலுள்ள வரலாறு தொடர்பான மிகத் தெளிவான மற்றும் தொடர்ச்சியான தகவல்களை பகுப்பாய்வு செய்வதற்கு மனிதனால் முடியவில்லை. வரலாறு என்று இன்னமும் பூரணமற்ற முழுமையற்ற சில விடயங்களே கிடைத்துள்ளன.

விஞ்ஞானத் துறையின் கண்டுபிடிப்புகளுக்கு இணங்க புவியின் பரிணாமம் சுமார் 4 வருடங்களுக்கு முன்பே ஆரம்பித்துள்ளது. அதாவது உலகத்தின் புராதனம் 4 பில்லியன் வரை விரிந்துள்ளது. உலகம் உருவாகிய நாளிலிருந்து அதன் வரலாற்றை தொடர்ச்சியான பாகங்களில் எழுதியிருந்தால் கடந்த ஒரு லட்சம் வருடங்களுக்கு இதில் ஒரு பக்கத்தை எழுதியிருந்தால், இப்புத்தகத்தில் 45,000 பக்கங்களில் எழுதியிருக்கும். நாம் வரலாறு என குறிப்பிடும் சுமார் 6000 வருடகால வரலாறு அப்புத்தக பாகங்களின் கடைசி பாகத்தில் கடைசி பக்கத்தில் கடைசி 1 வரியாகும். உண்மை இதுவே. மனித பரம்பரையின் ஆதிமனிதன் புவிமீது உருவாகி இற்றைக்கு சுமார் மூன்று மில்லியன் வருடங்களே ஆகும். இதை நீண்ட வரலாற்றுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது உலகம் உருவாகிய நாளிலிருந்து மனித இனம் உருவாகிய காலத்தை மேலே குறிப்பிட்ட புத்தகத்தின் கடைசி மூன்று பக்களுக்கு வரையறுக்கிறது.

புவி சிறியதொரு கிரகம் என்பது உண்மை ஆனால் அதன் கதாபாத்திரம் எவ்வளவு நீண்டதாக உள்ளது என்பதை இதனூடாக விளங்கிக் கொள்ள முடியும். எமது வாழ்நாளில் நாம் எமது சுற்றச்சூழலில் உள்ளவற்றை கண்களில் பார்த்து, காதுகளில் கேட்டுள்ளோம். எனவே அவ்வாறானவற்றை எமக்கு எளிதில் குறிப்பிட முடியும். ஆனால் அதற்குமுன் காணப்பட்ட நிலமை தொடர்பாக நம்பிக்கையான தகவல்களை சேர்த்துக் கொள்வதற்கு எமக்கு எமது மனப்பதிவுகள் போதுமானவையல்ல. எனவே அவ்வரலாற்றை ஆய்வு செய்வதற்காக பல்வேறு ஆதாரங்கள் தரவுகள் தேவைப்படுகின்றன. அவற்றை “வரலாற்று ஆதாரங்கள்” என குறிப்பிடுகிறோம். எமது மூதாதையர்களான ஆதிமனிதனால் வரையறுக்கப்பட்ட சித்திரங்கள், எழுத்துமூல வெளியீடுகள், வாய்மொழி மூலமாக கொண்டுவரப்பட்ட தகவல்கள் என்ற நாட்டார் கதைகள் அவர்களுடைய படைப்புகளில் மீதியுள்ள இடிபாடுகள் போன்றவை அவ்வரலாற்று ஆதாரங்களில் முக்கியமானவையாகும்.

அவ்வரலாற்று ஆதாரங்களை பயன்படுத்தி தெளிவாக்கிக் கொள்ள கூடியவை மேலே குறிப்பிட்ட கடைசி பாகத்தில் கடைசி 1 பக்கம் மட்டுயேயாகும். அதற்கும் அப்பாலுள்ள வரலாற்றை ஆய்வு செய்வதற்கு அந்த வரலாற்று ஆதாரங்கள் பயன்படாது. அதற்காக வேறு வடிவிலான வரலாற்று ஆதாரங்களை பயன்படுத்த வேண்டியுள்ளது. அவை விஞ்ஞானத்துறையில் நாம் பெற்றுள்ள புதிய அறிவு மற்றும் தொழினுட்ப வளர்ச்சி ஆகியவையாகும்.

உலகில் வரலாற்று மற்றும் பரிணாமம் தொடர்பாக ஆய்வு செய்வதற்காகவே வடிவமைக்கப்பட்ட விசேடமான பாடநெறிகளில் உள்ளடங்கியுள்ளன. “புவியியல்” அவற்றுள் முதன்மையானதாகும். “பௌதீகவியல்”, “விண்வெளியியல்” “உயிரியல்” போன்றவை அதற்கு ஒத்தாசை வழங்குகிறது.

தொடரும்...



# அசாதாரணமான கடந்த காலத்தை மௌனமாக ஏற்றுக் கொண்ட நெரிசலான இடம்

# உத்துவன் மலை

இலங்கை வரலாற்றில் மிகவும் அநீதி இழைக்கப்பட்ட வீரனுக்கு நிழல் கொடுத்த சிறிய மலைத் தொகுதி ஒன்றை மாவனெல்ல நகருக்கு அருகில் காணமுடியும். வெள்ளையர்களுக்கு நான் எதிரியே ஆனாலும் எதேச்சதிகாரத்திற்கு எதிராகப் போர் புரிந்த வீர இளைஞனான சரதியலுக்கு அவ்வாறு பாதுகாப்பு கொடுத்தது இந்த உத்துவன் மலையாகும்.

இயற்கையின் அழகு மிகு படைப்பான இது ஆங்கிலேயர்கள் மத்தியில் பிரசித்தி பெற்றது **castle rock** என்ற பெயரில் ஆகும். தொலைவில் தெரியும் சதுர வடிவிலான கட்குகையானது ஐரோப்பாவில் உள்ள செங்கோட்டையை நினைவுபடுத்துவதாக உள்ளதால் அந்தப் பெயரில் அழைக்கப்படுகிறது. இரண்டு தொடர்களாக காணப்படும் மலை உச்சியில் உள்ள கற்குகைக்கு சரதியல் கல் என்று கூறப்படும்.

மத்திய மலை நாட்டை நோக்கி பயணிக்கும் போது உத்துவன் சந்தியினூடாக பொதுவாக மலைத்தொடருக்கு செல்லும் பாதையைக் காணலாம் வீதியினூடாக 1-2 தொடக்கம் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் பயணிக்கும்போது மலையடிவாரத்தை அடைய முடியும் மலையின் உச்சி 1410 அடி இருக்கும் மலை ஏறுபவர்கள் மத்தியில் உத்துவன் மலை மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

மலையடிவாரத்தின் கீழ் நிலப் பகுதிகள் அனைத்தும் தனியார் நிலங்கள் விரிந்து காணக் கிடைப்பதால் அங்கு றப்பர் தோட்டங்களைக் காணமுடியும். மலை நடுவில் சிறிய வனப்பகுதியும் சூழ்ந்து காணப்படுகிறது. மலைக்கு அருகில் செல்வதற்கு முன்பாக பின்பக்கமாக முக்கிய இடம் ஒன்றை காண முடியும். அதுதான் சரதியல் வாழ்ந்ததாக கருதப்படும் கற்குன்றுக்கு கீழே அமைந்துள்ள சரதியல் குகை எனப்படும். இந்தக் குகைக்கு உள்ளே பிரவேசிக்க வேண்டுமானால் தவழ்ந்து தான் செல்ல வேண்டும்.

மரம் செடி கொடிகளாலும் கற்களால் சூழப்பட்ட பாதையூடாக முன்னோக்கிச் செல்லும் போது கற் கட பீட பூமியை அடைய முடியும். அந்த இடத்திற்கு மேலே சரதியல் மலை தெளிவாக தெரியும். கிட்டத்தட்ட குகையை நோக்கி வருகின்ற போது சரதியல் கல்லின் அடிப்பாகத்தை அடைய முடியும். சிறிய உயரமாக இருந்தாலும் 90 பாகை சாய்வாக கொண்ட சரதியல் கல்லானது அதன்மீது ஏறுபவர்களுக்கு சற்று அவதாரமான விடயமாகும். கல் உச்சியில் பத்தலைகலை மலை, அலகல்ல மலை போன்ற மாவனெல்ல பிரதேசத்திற்குட்பட்ட வயல் நிலங்கள் போன்ற வனப்பான அழகு மிகு காட்சிகளை காணலாம்.

கவலைக்கிடமான விடயம் யாதெனில் திண்மக் கழிவுப் பொருட்கள் இந்த மலை மீது போடப்பட்டுள்ள மையாகவும் சரதியலினதும் மேனகாவினதும் ஒப்பற்ற காதலுக்கு மதிப்பு கொடுப்பதாகவிருந்தால் இயற்கை சூழலுக்கும் ஆதரவளிக்கும் நீங்கள் மலை மீது மலையேற்றம் செய்வதாக இருந்தால் அந்த இயற்கைச் சூழலை மாசுபடுத்தாது பார்த்துக் கொள்ள வேண்டும்

குணசேன வித்தான அவர்களினால் எழுதப்பட்ட சரதியல் புத்தகத்தில் தொலைவில் தெரியும் உத்துவன் மலை பற்றிய பதிவில் மேற்படி உள்ளது.

கொழும்பு கண்டி வீதியில் கேகாலையிலிருந்து செல்லும் போதும் ஆறு மைல் தொலைவில் செல்கின்ற போது அழகாக அருமையாக காட்சி தருவது தான் உத்துவன் மலையாகும்.

தாயான பீச்சேஹாமி தனது மகனான சரதியளின் பிரிவுத் துயரால் எப்போதும் துக்கத்துடன் கீழே பார்த்துக் கொண்டு கண்ணீர் விடும் காட்சி போல் இந்த மலை உச்சி காணப்படும்.



# நாட்டின் எதிர்கால மாற்றத்திற்கான முன்மாதிரி சே

## CHE DAY 2021














## ஹொரணை, யஹலகெலே, சே பூங்காவில் (ஒக்டோபர் 08)

சே நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்துதல், இசை நிகழ்ச்சி மற்றும் உரை நிகழ்த்துதலும் இடம்பெற்றது.

நாளைய தினத்தை
காண்பதற்கு
துடிக்கின்ற
வாழ்க்கைக்கு
வாலிப
உள்ளங்களை
ஒன்றுசேர்த்து
பலத்தை
சேர்ப்பதற்கான
**இளைஞர்களின்**
**கடமை**












## இரத்த தானம் செய்வோம்!











464/20 பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்த பத்தரமுள்ளையில் வசிக்கும் பந்துல புஷ்பகுமார ஆகிய என்னால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.